## மையித்து வீட்டில் மூன்று நாட்களுக்கு சமைக்கவும் கூடாது, சமைத்து ஒன்று கூடி சாப்பிடவும் கூடாது என்பது பற்றிய ஆய்வு

**6905 – حَدَّثَنَا نَصْرُ بْنُ بَابٍ، عَنْ إِسْمَاعِيلَ، عَنْ قَيْسٍ، عَنْ جَرِيرِ بْنِ عَبْدِ اللَّهِ الْبَجَلِيِّ، قَالَ: «كُنَّا نَعُدُّ الِاجْتِمَاعَ إِلَى أَهْلِ الْمَيِّتِ وَصَنِيعَةَ الطَّعَامِ بَعْدَ دَفْنِهِ مِنَ النِّيَاحَةِ»**

**ஜரீர் இப்னு அப்தில்லாஹ் அல்பஜலிய்யி அறிவிக்கின்றார் : நாங்கள் மையித்து வீட்டில் ஒன்று கூடுவதையும், மையித்தை அடக்கியதன் பின்னர் உணவு சமைப்பதையும் ஓலமிட்டு அழுவதில் நின்றும் உள்ளது எனக் கருதக் கூடியவர்களாக இருந்தோம்.** ( அஹ்மத் : 6905 )

இதனை மஸ்ஊத் அஹ்மத் தனது மின்ஹாஜுல் முஸ்லிமீனில் கொண்டு வந்து இவ்விரண்டு செயல்களையும் செய்யக்கூடாது என்கின்றார்.

இந்த ஹதீஸில் நஸ்ர் இப்னு பாப் என்பவர் இடம் பெறுகிறார். இவர் பலயீனமானவராக இருந்தாலும் இவருக்கு பக்கபலம் இருக்கின்றது. இருந்தாலும் இந்த செய்தி நபி ﷺ அவர்கள் வரைக்கும் சென்றடையவில்லை, இது மவ்கூப் என்ற வரையறைக்குள் அடங்குகின்றது. ஏனெனில் ஸஹாபாக்கள் நாங்கள் செய்து கொண்டிருந்தோம் என்று கூறுகின்றார்கள். மாறாக நபியுடைய காலத்தில் அல்லது நபியவர்கள் அங்கீகரித்தார்கள் என்று இருந்தால் அது வேறு விடயம்.

இந்த ஹதீஸ் இப்னுமாஜா என்ற ஹதீஸ் கிரந்தத்திலும் 1612ம் இலக்கத்தில் பதியப்பட்டுள்ளது. இவையனைத்தும் நபி ﷺ அவர்கள் வரைக்கும் சென்றடையாத மவ்கூபான அறிவிப்புக்களாகும். மவ்கூபான அறிவிப்புக்கள் ஹதீஸ்களாகாது. எனவே இந்த அறிவிப்பைப் பின்பற்ற முடியாது. ஆகையால், மையித்து வீட்டில் சமைப்பது, ஒன்று கூடி சாப்பிடுவது போன்றவை தடுக்கப்பட்டவைகளல்ல. மாறாக அது ஆகுமான செயல்களாகும்.